1971 டிசம்பர் 15]

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே. டாக்சிகாரர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் நமக்கு, எம்.எல்.ஏ. பாஸ் இருக்கிறது. தனிச் சலுகையாக அதைக் காட்டி டாக்சி வரும் வகையில் உத்தரவு போட சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் பாஸைக் காட்டித்தான் டாக்சிக்காரரிடம் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதில்லை. சமுதாயத்தில் ஏற்கனவே நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். பிரயாணத்திற்கு சலுகை இல்லாமல் இருக்கிறதே. அதைக் காட்டி அனுமதி பெறலாமா என்பதைத்தான் சர்க்கார் கவனிக்குமா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பிரயாணத்திற்குத் தனிச் சலுகை இல்லை.

Triplicane-Nanganallur Bus route.

* 439 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there are proposals with the Government to introduce more buses on the routes (1) T. Nagar–Nanganallur and (2) Mylapore–Nanganallur; and introduce a new route (3) Triplicane—Nanganallur?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே. நங்கநல்லூர் பகுதி மிகவும் முன்னேற்றமடைந்து வரும் பகுதி. முக்கியமான சபர்பன் ஏரியா என்று சொல்லலாம். முக்கியமான புறநகர்ப் பகுதியாக இருப்பதால், அங்கே இருந்து பல மக்கள் சென்னைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு போதிய பஸ் வசதி இல்லை. அதை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நங்கநல்லூரிலிருந்து ஏற்கனவே, சென்னையின் பல பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. திருவல்லிக்கேணி. மைலாப்பூர், ஹைகோர்ட் ஆகிய பல்வேறு பகுதிகளுக்கும் வர வசதிகள் இருக்கின்றன. அதிகப்படுத்த தேவையொன்றும் இல்லை.

கோவில் திருப்பணிகள்.

* 440 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971—72 ம் ஆண்டில் கோவில்கள் புதுப்பிக்க அரசு வழங்கிய மொத்த மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ரூபாய் நான்கு லெட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.